ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற அந்தத் திட்டத்திற்கு என்ன செலவாகும் என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி அது குறைந்த அளவில் நிதி ஆதாரத்திற்கு உட்பட்டிருந்தால் உடனடியாக செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி ஆதாரம் அதிகமாக வந்திருந்தால் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல உலக வங்கியின் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம். அதற்கு ஒன்றும் காலம் அதிகம் ஆகாது. வருகின்ற ஆண்டுகளிலே அதற்கான நடைமுறைகளையெல்லாம் கொண்டுவர இருக்கிறோம். ஆகவே விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 552, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

552—

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் வீட்டு சூரியசக்தி சுடுநீர் அமைப்பு.

*16113—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் வீட்டு சூரியசக்தி சுடுநீர் அமைப்பு ஒன்றைத் தயாரிக்க ஆகும் செலவு எவ்வளவு ?

(ஆ) 1992-93 ஆம் ஆண்டில் கிராமப்புற மக்களுக்கு அதிகமான அமைப்புகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் எந்த சாதனங்களையும் தயாரிப்பதில்லை. தமிழ்நாட்டில் சூரிய சக்தி சுடுநீர் சாதனங்களை பல நிறுவனங்கள் தயாரித்து வருகின்றன. வீட்டு சுடுநீர் சாதனம் ஒன்றின் விலை தயாரிப்பாளர்களிடமிருந்து விலையைப் பொறுத்து ஏறத்தாழ ரூ. 10,500 முதல் ரூ. 12,500 வரை ஆகிறது.

1993 ஏப்ரல் 30]

(ஆ) கிராமப்புற மக்களிடமிருந்து அதிக விண்ணப்பங்கள் வந்தால் அரசு ஆவன செய்யும்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரிய சக்தியின் வாயிலாக இயங்கும் அந்த மின் அடுப்பை அரசே தயாரிப்பு செய்து கிராம மக்களுக்கு கொடுக்கின்ற வகையிலே மானிய விலையில் கொடுக்கப்படுமா என்பதோடு அதை கிராம மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரசின் சார்பாக விளம்பரம் செய்யப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் இப்படிப்பட்ட சுடுநீர் அடுப்பை வழங்குவதற்காக T.E.D.A. என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு எனர்ஜி டெவலப்மெண்ட் ஏஜென்சி என்ற நிறுவனம் நம்முடைய பொதுப் பணித் துறைக்கு உட்பட்ட ஒரு அரசு நிறுவனம் ஆகும். அவர்களின் மூலமாகத்தான் இதை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னது போல இதை நாம் தயாரிப்பது இல்லை. பல்வேறு தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்கி வினியோகம் செய்கிறோம். இதற்கு மத்திய அரசு மானியமாக ரூபாய் 2000-மும் மாநில அரசு மானியமாக ரூபாய் 1500-ம் தரப்படுகிறது. ஆகவே கிராமப்புற மக்களிடத்திலே இதை விளம்பரப்படுத்துகின்ற வகையில் அரசோடு சட்டமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்களேயானால் இதுபற்றி நாம் நல்ல முறையில் விளம்பரம் செய்து, அதன் பின்னர் கிராம மக்கள் ஒவ்வொருவரும் இதைப் பெறுவதற்கு முயற்சிக்கலாம். இந்த யோசனையை அரசு பரிசீலிக்கலாம். இதற்கான நல்ல முனைப்பான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலனை செய்யும் என்று சொன்னதற்கு நன்றியைக் கூறிக் கொண்டு அத்தோடு பாதுகாக்கப்பட்ட குடிநீராக இருந்தாலும் நிறைய நோய்கள் வருகின்றன என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தண்ணீரை சுடச் செய்து சாப்பிட வேண்டும் என்று கூறியதின் அடிப்படையில் கிராமப்புறங்களில் இருக்கிற மேல் நிலைத் தொட்டிகளுக்கு செல்கிற தண்ணீரை சுடுநீராக மாற்றி

மேல்நிலைத் தொட்டிகளுக்கு அனுப்பி மக்கள் பயன் பெறும் வகையில் ஒரு திட்டத்தை கொண்டு வந்து அந்த சூரிய சக்தி அடுப்பின் வாயிலாக அந்த தண்ணீரை சூடு செய்து மக்களுக்கு வழங்குகிற வகையிலே ஒரு நல்ல திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தைப் பொறுத்த மட்டிலே நகர்ப்புறம், கிராமப்புறம் என்று கிடையாது. எந்தப் பகுதியிலேயிருந்து விண்ணப்பங்கள் வந்தாலும், அந்த அடுப்புகளை நாம் வழங்கலாம், நகர்ப்புற மக்களுக்கும் வழங்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல பாதுகாக்கப்பட்ட குடிநீர் தருவதற்காக மேல்நிலைத் தொட்டிகளின் மீது இப்படிப்பட்ட அடுப்புகளை அமைத்தால் அந்த குடிதண்ணீர் பாதுகாக்கப்பட்டு மக்களுக்கு கொடுக்கப்படலாம். ஒரு நல்ல யோசனைதான். இருந்தாலும் போர்வெல் மூலம் கொடுக்கப்படுகிற தண்ணீர் எல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீராகத்தான் ஓவர்ஹெட் டேங்க் மூலமாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆக அதைப்பற்றி அரசு பரிசீலிக்கலாம் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன். இதனுடைய விளைவுகள், இதற்குப் பின்னாலே இருக்கிற நிதி ஆதாரப் பிரச்சினை மற்றவைகளையெல்லாம் இந்த அரசு பரிசீலனை செய்ததற்குப் பின்னால் அதுபற்றி கருத்து தெரிவித்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 553, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

553—

புங்கங்குழி வருவாய் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்தல்.

*9155— டாக்டர் சு. மணிமேகலை :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியத்தில் புங்கங்குழி வருவாய் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS